# DINAMALAR 24.03.2023

## புதிய மரக்கன்றுகள் நடும் பணி துவக்கம்

**கோவை, மார்ச் 24–**

வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவில், புதிதாக நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

ஆர்.எஸ்.புரம் ரோட்டில் அமைந்துள்ள, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் தாவரவியல் பூங்கா(பொட்டானிக்கல் கார்டன்) மொத்தம், 3.30 ஹெக்டர் பரப்பில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் 100 வகையான மரங்கள், 40 வகையான மூலிகைச் செடிகள், 25 வகையான ஆர்க்கிட்கள், 50 வகையான சிறு தவாரங்கள், சில மூங்கில் வகைகள் பராமரிக்கப்படுகின்றன.

பூங்காவில் மரங்கள், செடிகளுக்கு இடையே வளர்ந்திருந்த களைச் செடிகள், பொக்லைன் இயந்திரம் கொண்டு அகற்றப்பட்டன. புதிதாக மரக்கன்றுகள் நடும் பணி நடந்து வருகிறது.

அதன்படி, ஆலமரம், வில்வம், வேம்பு, கடம்பு, மகிழமரம், மெக்சிகன் லாவெண்டர், குண்டுமணி, புங்கமரம், கொடுக்காய்ப்புளி, மகாகனி, உள்ளிட்ட நாட்டு மரக்கன்றுகள் பூங்காவில் நட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.